

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு. எம் மதுசூதனன், நாகர்கோவில் நகர்நல அலுவலர் மரு.எஸ். வினோத் ராஜா, வட்டவிளை நகர்புற சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் உமாராணி,.இ நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு. மாதேவன் பிள்ளை மற்றும் திரு. ராஜா ஆகியோர் இருந்தனர்.

செ.வெ.எண்:21/2017 நாள்:07.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று (07.01.2017) நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு 20, பறக்கை செட்டி தெரு, பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

மாவட்ட ஆட்சித்தலைவர் பொது மக்களிடம் தெரிவித்ததாவது:

கடந்த டிசம்பர் மாதம் கடைசி வாரம் பலர் இந்த பகுதிகளில் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டதைதொடர்ந்து, மாவட்ட சுகாதார துறையும், நகராட்சி பொது சுகாதாரத் துறையும், இணைந்து வீடுதோறும் களப்பணி செய்ததில் சிலருக்கு டெங்கு காய்ச்சல் இருப்பது கண்டறியப்பட்டது. பாதிக்கப்பட்ட நபர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உரிய சிகிட்சை அளிக்கப்பட்டு நலமுடன் இருக்கிறார்கள். மேலும் டெங்கு காய்ச்சல் பராவாமல் தடுக்க வீடுகள் தோறும் கண்காணிப்பு பணி, கொசு ஒழிப்பு பணி, புகைமருந்து அடிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தண்ணீர் தொட்டிகளுக்கு கொசுப்புழு உண்ணும் மீன்களும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இப்பகுதி மக்களுக்கு மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட மற்றும் அனைத்து பொதுமக்களுக்கும் நிலவேம்பு குடிநீர் விநியோகித்து வருகிறது.

பொதுமக்கள் டெங்கு காய்ச்சலை பரப்பும் கொசு பரவாத வண்ணம் வீடு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திட வேண்டும். தண்ணீர் சேமித்து வைக்கும் தொட்டியை வாரம் ஒருமுறை பிலிச்சிங் பவுடர் போட்டு சுத்தமாக தேய்த்து கழுவி அதன் பின்னர் தண்ணீர் நிரப்பிட வேண்டும். இது ஒரு வைரஸ் கிருமியால் ஏற்படும் காய்ச்சல் டெங்கு காய்ச்சல் உள்ளவரை கடித்த கொசு ஆரோக்கியமானவர்களை கடிக்கும் பொழுது ஒருவரிடமிருந்து மற்றவருக்கு இது போன்ற காய்ச்சல் பரவுகிறது. கூடுமானம் வரை நோயின்றி வாழ அதற்குறிய முன்னெச்சரிக்கையை நாம் மேற்கொண்டால் நோயிலிருந்து விடுபட்டு டெங்கு காய்ச்சலை தவிர்ப்போம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கூறினார்.

இவ்ஆய்வின்போது மாவட்ட துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு. ஏம் மதுசூதணண் MBBS DPH, மற்றும் நாகர்கோவில் நகர்நல அலுவலர் மரு.எஸ். வினோத் ராஜா MBBS., வட்டவிளை நகர்புற சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் டாக்டர் உமாராணி,MBBS., நகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு. மாதேவன் பிள்ளை மற்றும் திரு. ராஜா ஆகியோர் உடன் இருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்